செ.வெ. எண்: 391

நாள்: 14.05.10

# பத்திரிக்கைச் செய்தி

இடம்: தமிழ் நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
417, பாந்தியன் சாலை,
எழும்பூர், சென்னை –8

நாள்: 14.05.2010
நேரம்: மாலை 5.00 மணி

*******

தமிழக மக்கள் அனைவருக்கும் அடிப்படை சுகாதார வசதிகள் அனைத்தும் சென்றடைவதற்கு ஏதுவாக பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகின்றது. அதன் ஒரு பகுதியாக, இன்று (14.05.2010) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அவர்கள் இரத்தம் எடுத்து செல்லும் 17 குளிர்சாதன ஊர்திகளை மக்களின் பயன்பாட்டிற்காக வழங்குகிறார்கள். இந்த விழாவில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை முதன்மைச் செயலர் திரு வி.கு. சுப்புராஜ், இ.ஆ.ப. அவர்களும், தமிழ் நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்க திட்ட இயக்குநர் திரு. சம்பு கலோலிகர் இ.ஆ.ப. அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்த விழாவினை தமிழ் நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கமும், தமிழ் நாடு குருதி பரிமாற்றுக் குழுமமும் இணைந்து நடத்துகின்றது.

இந்த வாகனமானது, இரத்தக் கொடை முகாம்களிலிருந்து சேகரிக்கப்படும் இரத்தத்தை அரசு மருத்துவ கல்லூரிகளில் உள்ள இரத்த சேமிப்பு மையங்களுக்கு கொண்டு செல்ல பயன்படுத்தப்படும்.

தமிழ் நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் மற்றும் தமிழ் நாடு குருதி பரிமாற்றுக் குழுமமும், மாநில மருந்து கட்டுப்பாட்டு இயக்குநருடன் இணைந்து, தமிழ்நாட்டிலுள்ள இரத்த வங்கிகள் மற்றும் சேமிப்பு மையங்களை கண்காணிக்கவும் மற்றும் உரிமம் வழங்கும் பணியினையும் செய்கின்றன. நமது மாநிலத்தில் 245 இரத்த வங்கிகள் மற்றும் 117 இரத்த சேமிப்பு மையங்கள் இயங்கி வருகின்றன.

## இரத்த வங்கிகளின் விவரங்கள்

| வ.எண். | இரத்த வங்கிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசு இரத்த வங்கிகள் | 83 |
| 2 | தனியார் இரத்த வங்கிகள் | 151 |
| 3 | அரசு சார் / மத்திய இரத்த வங்கிகள் | 9 |
| 4 | தொழிலாளர் காப்பீட்டு மருத்துவமனை இரத்த வங்கிகள் | 2 |
| | மொத்தம் | 245 |

| வ.எண். | இரத்த சேமிப்பு மையங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|

| வ.எண். | இரத்த சேமிப்பு மையங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசு இரத்த சேமிப்பு வங்கிகள் | 54 |
| 2 | தனியார் இரத்த சேமிப்பு வங்கிகள் | 63 |
| | மொத்தம் | 117 |

| வ.எண். | அரசு இரத்த ஆக்கக்கூறு பகுப்பு மையங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசு இரத்த ஆக்கக்கூறு பகுப்பு மையங்கள் | 7 |
| 2 | புதிதாக தரம் மேம்படுத்தப்பட்ட அரசு இரத்த ஆக்கக்கூறு பகுப்பு மையங்கள் | 7 |
| | மொத்தம் | 14 |

அரசு சாரா தொண்டு நிறுவனங்களும், மாவட்ட நிர்வாகமும், இந்திய செஞ்சிலுவை சங்கமும் இணைந்து, ஒவ்வொரு ஆண்டும், தேசிய இரத்ததான தினத்தை அக்டோபர் 1–ம் தேதியும் மற்றும் உலக இரத்த தான தினத்தை ஜூன் 14–ம் தேதியும் தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

இந்நிகழ்வில் இரத்த தான முகாம் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 125 முறைகளுக்கு மேல் இரத்த தானம் செய்தவர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

மாணவர்கள் மத்தியில் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் மற்றும் இரத்த தானம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, தமிழ் நாட்டில் உள்ள பெரும்பான்மையான பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் செஞ்சுருள் சங்கம் (RRC) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரத்தப் பற்றாக்குறையை போக்குவதற்காகவும், 100 விழுக்காடு தன்னார்வ இரத்த தானத்தை அளிப்பதற்காகவும், முதலாமாண்டில் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு சேர்க்கை படிவத்துடன் தன்னார்வ இரத்ததான ஏற்பு மற்றும் பதிவு படிவத்தை இணைத்து வழங்கி, அவர்களையும் தன்னார்வ இரத்ததானக் கொடையாளர்களாக மாற்ற தமிழ் நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் முயன்று வருகின்றது.

2009–10–ம் ஆண்டில், 5,315 தன்னார்வ இரத்த தான கொடை முகாம்களை நடத்தி, தன்னார்வ இரத்தக் கொடையாளர்களிடமிருந்து 6,32,341 இரத்த அலகுகள் பெறப்பட்டுள்ளது.

<u>இரத்த ஆக்கக்கூறு பகுப்பு மையம்:</u>

ஆரம்ப காலங்களில் நோயாளிகளுக்கு, 350 மி.லி. முழுமையான இரத்தம் செலுத்தப்பட்டு உயிர்காக்கப்பட்டு வந்தது. இந்த நவீன காலகட்டத்தில் இரத்தமானது, நான்கு ஆக்கக் கூறுகளாக முறையே இரத்த சிவப்பணுக்கள், (இரத்த சோகை உள்ள நோயாளிகளுக்கு) பிரஸ் ப்ரோஸன் பிளாஸ்மா

(தீக்காயம்பட்ட நோயாளிகளுக்கு) இரத்த உதிரிகள் (டெங்கு காய்ச்சல் உள்ள நோயாளிகளுக்கு) கிரையோபிரிஸிபிடேட் (இரத்தம் உறையா நோயாளிகளுக்கு) என பிரிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

இப்பணியை 14 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள இரத்த ஆக்கக் கூறு பகுப்பு மையங்கள் செய்கின்றன.

இரத்தம் எடுத்துச் செல்லும் ஊர்திகள் கீழ்க்கண்ட அரசு மருத்துவமனைகளுக்கு இன்று வழங்கப்படுகிறது.

| வ.எண். | மருத்துவமனையின் பெயர் | வாகன எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இரத்த வங்கி, அரசு ராஜாஜி கல்லூரி மருத்துவமனை, மதுரை | 1 |
| 2 | இரத்த வங்கி, அரசு அண்ணல் காந்தி நினைவு மருத்துவமனை, திருச்சி | 1 |
| 3 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம் | 1 |
| 4 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் | 1 |
| 5 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்பத்தூர் | 1 |
| 6 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி | 1 |
| 7 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர் | 1 |
| 8 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தேனி | 1 |
| 9 | இரத்த வங்கி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம் | 1 |
| 10 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தூத்துக்குடி | 1 |
| 11 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கன்னியாகுமரி | 1 |
| 12 | இரத்த வங்கி, அரசு பொது மருத்துவமனை, சென்னை | 1 |
| 13 | இரத்த வங்கி, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை | 1 |
| 14 | இரத்த வங்கி, அரசு கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை | 1 |
| 15 | இரத்த வங்கி, அரசு தலைமை மருத்துவமனை, கடலூர் | 1 |
| 16 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தர்மபுரி | 1 |
| 17 | இரத்த வங்கி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவாரூர் | 1 |
| | மொத்தம் | 17 |

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

3/